பக்கங்கள்:-22

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஆனி 23 | திங்கட்கிழமை | 07.07.2025 | அதிர்வு 337

## குளத்தில் மூழ்கி 3 சிறுவர்கள் பலி

### வாகரையில் சோகம்



மட்டக்களப்பு, வாகரை – பனிச்சங்கேணி குளத்தில் மூழ்கி 3 சிறுவர்கள் 06



## செம்மணியில் மனிதப் பேரவலங்கள்

# சித்துப்பாத்தி மயானம் எங்கும் புதைகுழிகள்!

## நேற்று சிரமதானப் பணிகளின் போது என்புத் தொகுதி எச்சங்கள் அடையாளம்

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம், செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் மனிதப் புதைகுழி அகழ்வு இடம் பெறும் பகுதியைச் சூழ நேற்று ஜே.சி.பி. இயந்திரத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட சிரமதானப் பணிகளின் போது என்புத் தொகுதி எச்சங்கள் அடையாளம் காணப் பட்டுள்ளன. 06






இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவராக இருந்து மறைந்த அமரர் இராஜவரோதயம் சம்பந்தனின் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று திருகோணமலை நகரில் நடைபெற்றது.

ஆனால் சம்பந்தனின் நெருக்கமான உறவுகளோ, நம்பிக்கைக்குரிய ஆதரவாளர்களோ, அவரோடு நெருங்கிப் பழகியவர்களோ அந்த நிகழ்வில் காணப்படவில்லை.

இறுதிக் காலத்தில் தளர்ந்திருந்த சம்பந்தனை, திட்டமிட்டுப் புறமொதுக்கி, அவரது மனதை நோகடிக்கும் விதத்தில் நடந்து கொண்டவர்களே இந்த நினைவேந்தல் நிகழ்வை நடத்தியமை ஓர் அபத்த நாடகமாக திருகோணமலையில் நோக்கப்படுகிறது.

அவருக்கு மிக நெருக்கமாக கடைசி வரை செயல்பட்ட அவரின் முக்கிய மெய்ப்பாதுகாவலர் ஒருவர் தொலைபேசி எடுத்து இது பற்றி வேதனையுடன் புலம்பினார்.

“இப்படி ஒரு நிகழ்வு நடத்தப்படுவதை எனக்குக் கூடச் சொல்லவில்லை. அவர் உயிரோடு 06

# புதிய அரசமைப்பு எப்போது வரும்?

## வாக்குறுதியை உடன் நிறைவேற்றுங்கள் என்று அரசிடம் சஜித் அணி வலியுறுத்து



புதிய அரசமைப்பு இயற்றப்படும் என வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுவதில் அநுர அரசு இழுத்தடிப்பு செய்து வருகின்றது என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி குற்றஞ்சாட்டியுள்ளது.

"புதிய அரசமைப்பு இயற்றப்படும் எனவும், அதற்கு முன்னுரிமை வழங்கப்படும் எனவும் அநுர அரசு உறுதியளித்திருந்தது. எனினும், தற்போது புதிய அரசமைப்பு பற்றி எவ்வித கருத்தாடலும் இடம்பெறவில்லை." – என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"ஜனாதிபதி அநுரகுமார நாட்டு மக்களுக்காகப் பல தடவைகள் உரையாற்றியுள்ளார். சர்வதேச மாநாடுகளிலும் பங்கேற்றுள்ளார்.எனினும், வழங்கிய வாக்குறுதியின் பிரகாரம் புதிய அரசமைப்பு இயற்றப்படும் என அவர் கூறாமல் இருக்கின்றார்.

2015 – 2019 நல்லாட்சி காலத்தில் தயாரிக்கப்பட்ட அரசமைப்பை அடிப்படையாகக் கொண்டு புதிய அரசமைப்பு இயற்றப்படும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படும் எனவும் தேசிய மக்கள் சக்தி உறுதியளித்திருந்தது. அந்த உறுதிமொழியை நிறைவேற்றுவதாக இருந்தால் அதற்குரிய பணிகளைத் தற்போது ஆரம்பித்திருக்க வேண்டும்.

அரசு ஒன்றின் 4 மற்றும் 5 ஆவது வருடத்தில் புதிய அரசமைப்பை இயற்றுவதற்குரிய பணியை முன்னெடுப்பது, சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவது என்பனவெல்லாம் நடைமுறைச் சாத்தியமற்ற விடயமாகவே அமையும்.

ஆகவே, புதிய அரசமைப்பை இயற்றுவதற்குரிய நடவடிக்கை விரைவில் முன்னெடுக்கப்பட வேண்டும். அதற்கு எதிரணி முழு ஆதரவு வழங்கும்." – என்றார்.

# இந்தியளவில் நீச்சல் போட்டிகளில் சாதித்து வரும் ஈழத்து மாணவிகள்















தமிழ்நாட்டில் அகதிகளாக வாழ்ந்து வரும் வல்வெட்டித்துறையை சேர்ந்த ஜெயக்குமார் அருள்ஜோதி தம்பதியரின் புதல்விகளான தனுஜா மற்றும் டிலாஜினி ஆகிய ஈழத்து சகோதிரிகள் இந்தியளவில் நீச்சல் போட்டிகளில் சாதித்து வருகின்றனர்.

தமிழ்நாடு, கிருஸ்ணகிரி மாவட்டத்தில் உள்ள ஓசூரில் கடந்த மாதம் 28ஆம் திகதி நடைபெற்ற மாநிலஅளவிலான நீச்சல் போட்டியில் கல்லூரிகள் (பெண்கள்) பிரிவில் பங்குபெற்ற தனுஜா (வயது–18) நான்கு பிரிவுகளிலும் முதன்மை இடம் பெற்று தங்கப்பதங்களை சுவீகரித்து சாம்பியன் ஆனார்.

இதேபோன்று அவரது சகோதரியான டிலாஜினி (வயது–10) பத்து வயதுப்பிரிவில் ஐந்து போட்டிகளில் பங்குபெற்று மூன்று தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலம் என ஐந்திலும் பதக்கம் பெற்று புள்ளிகள் அடிப்படையில் சாம்பியன் பட்டத்தை பெற்றுக்கொண்டார்.

இதேவேளை, கடந்த மாதம் 15 ஆம் திகதி சென்னை கோவலம் கடற்கரையில் நடைபெற்ற 10 கிலோ மீற்றர் கடல் நீச்சல் போட்டியில் பங்கேற்றிருந்த தனுஜா முதலிடத்தை பெற்று தங்கப்பதக்கத்தினை பெற்று சாதனை படைத்திருந்த நிலையில் அவரது சகோதரி டிலாஜினியும் 500 மீற்றர் கடல் நீச்சல் பிரிவில் பங்கேற்று பதக்கம் வென்றிருந்தார்.

# சி.ஐ.டி. பணிப்பாளராக ஷானி; மொட்டுக் கட்சி போர்க்கொடி!

"அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் அரசியல் செயற்பாடுகளில் பங்கேற்ற ஷானி அபேசேகர, குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளமை பாரதூரமான விடயமாகும்."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராக ஷானி அபேசேகர நியமிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் கருத்துரைக்கும்போதே சாகர காரியவசம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜே.வி.பி. அலுவலகத்தில் ஊடக சந்திப்பை நடத்தி, அக்கட்சியின் அரசியல் செயற்பாடுகளில் பங்கேற்ற ஷானி அபேசேகர குற்றப் புலனாய்வுப் பிரிவின் பிரதானியாக நியமிக்கப்பட்டுள்ளார். இது பாரதூரமான விடயமாகும். இதற்கு முன்னர் எந்தவொரு அரசும் இப்படிச் செயற்பட்டதில்லை.

தமக்குத் தேவையான விதத்தில் சட்டத்தைச் செயற்படுத்தவும், அரசியல் எதிராளிகளைப் பழிவாங்கும் – ஒடுக்கும் நோக்கிலுமே இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. ஒரு கட்சியாக இதனை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம்." – என்றார்.



# ஐஸ் போதைப்பொருளுடன் மூன்று வியாபாரிகள் அட்டாளைச்சேனைப் பகுதியில் நேற்றுக் கைது!

**(கனகராசா சரவணன்)**

அம்பாறை, அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிலுள்ள அட்டாளைச்சேனையில் 140 கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் 3 வியாபரிகளை நேற்று ஞாயிற்றுக் கிழமை பகல் கைது செய்துள்ளமையுடன் இரண்டு மோட்டார் சைக்கிள் மற்றும் பொதிசெய்யும் இயந்திரம், நிறுவை தராசு போன்றவற்றையும் தாங்கள் மீட்டுள்ளனர் என அக்கரைப்பற்றுப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவல்ஒன்றைஅடுத்துபொலிஸ்நிலைய பொறுப்பதிகாரியின் வழிகாட்டலில் போதை ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் யு.எல்.எஸ். ஆப்தீன் தலைமையில், பொலிஸ் இன்ஸ்பெக்டர் அனுர, பொலிஸ் கான்ஸ்டபிள்களான முனசிங்க, மெண்டிஸ், சியாம், மானவடு, குமார, எக்கநாயக்கா கியோரைக் கொண்ட குழுவினர் நேற்றுப் பகல் அட்டாளைச்சேனை பகுதியிலுள்ள வீதியில் மாறுவேடத்தில் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இதன்போது இரண்டுமோட்டார்சைக்கிளில் வந்த 3 பேர் போதை வியாபாரத்தில் ஈடுபட்ட சமயம் மாறுவேடத்தில் இருந்த பொலிஸார் அவர்களைச் சுற்றிவளைத்து சோதனையிட்ட போது 84 கிராம் 620 மில்லிக்கிராம் மற்றும் 31 கிராம் 50 மில்லிக்கிராம் மற்றும் 24 கிராம் 94 மில்லிக்கிராம் என 140 கிராம் ஐஸ் போதைப் பொருளை 3 பேரிடமிருந்து மீட்டனர். அவர்களையும் கைது செய்தனர்.

இதில் 84 கிராம் 620 மில்லிக்கிராம் ஐஸுடன் கைது செய்யப்பட்ட 40 வயதுடையவர் 2007 ஆம் ஆண்டு குற்றசாட்டு ஒன்றில் கைது செய்யப்பட்டு மன்னார் நீதிமன்ற பிணையில் வெளிவந்து, நீதிமன்றில் ஆஜராகாதமையை அடுத்து நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்டு,



தலைமறைவாகி இருந்து வந்துள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட 40,36,40 வயதுடைய மூன்று பேரும் நீண்டகாலமாக போதை பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளனர் எனப் பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதையடுத்து இவர்களை விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இன்று முதல் நாளாந்தம் இடம்பெறும் காங்கேசன்துறை சொகுசு ரயில் சேவை



கொழும்பு – காங்கேசன்துறை சொகுசு ரயில் சேவை இன்று முதல் நாளாந்தம் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பிலிருந்து தினமும் காலை 5.45க்கு பயணத்தை ஆரம்பிக்கவுள்ளதுடன் காங்கேசன்துறையிலிருந்து பிற்பகல் 02 மணிக்கு மீண்டும் கொழும்பு நோக்கி பயணிக்கவுள்ளதாக ரயில்வே திணைக்களத்தின் பொதுமுகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இந்த சொகுசு ரயில் சேவை இதற்கு முன்னர் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் மாத்திரம் முன்னெடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

புதிய சொகுசு ரயில் சேவை ஆரம்பமானதன் பின்னர், யாழ்தேவி ரயிலானது கொழும்பு கோட்டையிலிருந்து தினமும் காலை 06.40க்கு புறப்படும் என ரயில்வே திணைக்களத்தின் பொதுமுகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்தார்.

# குற்றமிழைத்த தரப்பினரே ஷானியைக் கண்டு அச்சம்

## மொட்டுக் கட்சிக்கு அமைச்சர் நளிந்த பதிலடி



“குற்றச்சாட்டுகளுக்கு இலக்காகியுள்ள தரப்பினருக்கே சி.ஐ.டியின் பணிப்பாளராக ஷானி அபேசேகர நியமிக்கப்பட்டுள்ளமை நடுக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.”

– இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

ஜே.வி.பி. தலைமையகத்தில் ஊடக சந்திப்பை நடத்திய ஷானி அபேசேகர சி.ஐ.டி. பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார் என மொட்டுக் கட்சி தரப்பில் முன்வைக்கப்படும் கருத்துத் தொடர்பில் வினவியபோதே அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இன்று விமர்சனங்களை முன்வைக்கும் தரப்பினரே ஷானி அபேசேகரவின் விசாரணை நடவடிக்கைகளை முடக்கி, அவரின் தொழிற்சார் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்தனர்.

ஷானி அபேசேகர திறமையான அதிகாரி. எனவே, ஷானி அபேசேகர யார் என்பது மக்களுக்குத் தெரியும். நாட்டுக்காக உயிரைக்கூடத் துச்சம் எனக் கருதி செயற்படும் அதிகாரியை நாம் பாதுகாப்போம்.

குற்றச் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்படும்போது தமக்குப் பிரச்சினை வரும் எனக் கருதும் தரப்பினரே இப்படியான விமர்சனங்களை முன்வைக்கின்றனர்.” – என்றார்.

# கொஸ்கமவில் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம்; விசாரணைக்கு மூன்று பொலிஸ் குழுக்கள்



கொஸ்கம – சுதுவெல்ல பகுதியில் நேற்று அதிகாலை நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பொன விசாரணைகளுக்காக 3 பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

இந்த துப்பாக்கிச்சூட்டில் 12 வயது சிறுமி உள்ளிட்ட மூவர் காயமடைந்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளந்தெரியாத இருவரால் முச்சக்கர வண்டியில் பயணித்தவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவிசாவளையைச் சேர்ந்த 12 வயது மகள், 30 வயதுடைய அவரது தாய் மற்றும் 44 வயதான மற்றுமொருவர் ஆகியோரே இந்த துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்துள்ளனர்.

இசைக்கச்சேரியை பார்வையிட்டு மீண்டும் வீடு திரும்பும் போதே மூவரும் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகியுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

# சாதாரண தர பரீட்சை பெறுபேறுகள் 15ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடப்படும்; பரீட்சைகள் திணைக்களம்




2024 கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகள் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடப்படும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விடைத்தாள் திருத்தும் பணிகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் 478,182 பேர் தோற்றியிருந்தனர்.

இவர்களில் 398,182 பேர் பாடசாலை பரீட்சார்த்திகள் என இலங்கை பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.




# இலங்கை – இந்திய மீனவர் பிரச்சினைக்கு நீண்டகால தீர்வை எதிர்பார்க்கின்றோம்

## வட மாகாண கடற்றொழில் இணையத்தின் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

(எஸ்.ரகுதீஸ்)

இலங்கை – இந்திய மீனவர் பிரச்சினைக்கு நீண்டகால தீர்வைத் தான் வடக்கு மாகாண கடற்றொழில் சமூகமான நாங்கள் எதிர்பார்த்துள்ளோம் என்று வட மாகாண கடல் தொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சாளரும் ஊர்காவற்றுறை பிரதேச சபை தவிசாளருமான அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்தார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“வடக்கு மாகாண மீனவர்களுடைய நீண்டகால பிரச்சினையாக இந்திய மீனவர்களது எல்லைதாண்டிய மீன்பிடி நடவடிக்கை காணப்படுகிறது. இலங்கை இந்திய மீனவர்களது பிரச்சினையை தீர்ப்பதற்கு அல்லது சுமூகமாக கையாண்டு வடக்கு கடற்றொழிலாளர்களுடைய வாழ்வாதாரத்தையும் கடலையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு இலங்கை அரசாங்கத்திற்கு இருக்கின்றது. அந்த வகையில் அதனை காப்பாற்றித்தருமாறு இலங்கை அரசாங்கத்தை தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம்.

அண்மையில் இலங்கை – இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பாக இலங்கையினுடைய கடற்றொழில் அமைச்சு மற்றும் கடற்படையினர் இலங்கை கடற்பரப்பிற்குள் இந்திய மீனவர்களது வருகையை கட்டுப்படுத்துவதற்கு பல முயற்சிகள் எடுத்திருப்பதாக தெரிவித்திருக்கின்றார்கள். அவை தற்காலிகத்தீர்வாகவே இருக்கும். அதை நாங்கள் வரவேற்கின்ற அதே நேரம் இந்த பிரச்சினைக்கு நீண்டகால தீர்வைத் தான் வடக்கு மாகாண கடற்றொழில் சமூகமாக நாங்கள் எதிர்பார்த்துள்ளோம். அவ்வாறான நீண்டகால தீர்வானது இலங்கையின் வெளிவிவகார அமைச்சு தலையிட்டு இருநாட்டு வெளிவிவகார அமைச்சர் மட்டத்திலும் கடற்றொழில் அமைச்சு மட்டத்திலும் நேரடி பேச்சுவார்த்தை நடத்துவதே சிறந்த அணுகுமுறையாக இருக்கும். இந்த விடயத்தில் தற்காலிக தீர்வை விட நிரந்தரத் தீர்வுகாண ஜனாதிபதி தலைமையிலான இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றோம்.

அண்மையில் தமிழ்நாடு மற்றும் இலங்கை தரப்பில் தொப்புள்கொடி உறவு இல்லாமல் போய்விட்டதாக பரவலாக பேசப்பட்டு வருகிறது. எம்மைப் பொறுத்தவரையில் இலங்கையின் வடகிழக்கு தமிழர்களுக்கும் தமிழ்நாட்டு தமிழர்களுக்கும் இடையிலான தொப்புள்கொடி உறவு அல்லது அண்ணன் தம்பி உறவு முறையென்பது தொடர்கின்றது. அதற்கு தடையாக இருக்கின்ற தமிழ்நாட்டில் இருக்கின்ற இழுவை மடி தொழிலை அவர்கள் நிறுத்த வேண்டும். வெறுமனவே காலம் காலமாக அந்ததடைசெய்யப்பட்ட இழுவை மடிதொழிலை செய்துகொண்டு இலங்கை கடற்பரப்பிற்குள் மீன்பிடிக்க அனுமதி தரவேண்டும் என்று காலஅவகாசம் கோருகின்றமை இரு நாட்டு தமிழர்களிடையே விரிசலையே ஏற்படுத்தும். தமிழ்நாடு, புதுச்சேரி வாழ் இழுவைமடி தொழிலில் ஈடுபடுபவர்கள் அத்தொழிலை முற்றாக கைவிட முன்வர வேண்டும் என உரிமையோடு நாங்கள் கோரிநிற்கின்றோம். அவ்வாறு நீங்கள் முற்றாக நிறுத்தும் பட்சத்தில் தான் நாங்கள் சகோதரத்துவத்துடன் ஒற்றுமையுடன் இரு நாட்டு அரசாங்கங்களுடன் பேசி ஒரு சுமூகமான தீர்வினை காண நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

யாழ் குடா நாடு உள்ளிட்ட வடக்கு மாகாணத்தில் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகள் முன்னெப்போதும் இல்லாத வகையில் தற்போது அதிகரித்துள்ளது. அதனால் பல சமூக முரண்பாடுகள் தோற்றுவிக்கப்பட்டு வருகின்றன. அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் இவறான சட்டவிரோத தொழில்களை நிறுத்துவதாக கூறிவந்தாலும் எதுவுமே செய்யவில்லை. அந்த பிரச்சினையை கண்டும் காணாது கடந்து போகின்றமை எமக்கு வேதனையளிக்கிறது.

மாறாக சட்டவிரோத தொழில்களும் தொழிலாளர்களும் அதிகரித்து வருகின்றனர். இந்த அதிகரிப்பின் ஊடாக பல பிரதேசங்களிலே சமூக முரண்பாடு தோற்றுவிக்கப்பட்டிருகிறது. அந்த சமூக முரண்பாடானது எதிர்காலத்தில் வடமாகாண மீனவர்களிடையே மிகப்பெரும் முரண்பாடாக உருவாகும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. அவ்வாறு ஏற்படாது இருப்பதற்கு எங்களுடைய கடலையும், எங்களுடைய சூழலையும் பாதுகாக்கும் வகையில் சட்டத்தின் துணையுடன் சட்டவிரோத தொழில்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். கடற்றொழில் அமைசார், ஜனாதிபதி ஆகியோர் அதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அண்மையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு கடற்றொழிலாளி கடலிலே இறந்திருக்கின்றார். இவ்வாறு உயிரிழந்தவர் சட்டவிரோத தொழில்களுக்கு எதிராக போராடியதனால் தான் அவர் கொல்லப்பட்டிருக்கலாம் என முல்லைத்தீவு மட்ட மீனவ அமைப்புகள் சந்தேகம் தெரிவித்துள்ளன. அதேபோன்று வடமராட்சி கிழக்கில் இடம்பெற்று வரும் சட்டவிரோத தொழில்களுக்கு எதிராக போராடிவரும் பாரம்பரிய மீனவர்கள் கடும் அச்சுறுத்தல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

சம்பந்தபட்ட கடற்றொழில் அமைச்சரும் அதிகாரிகளும் அரசாங்கமும் எதுவித நடவடிக்கையும் எடுக்காது கண்டும் காணாமல் ஊக்குவித்து வருகின்றமை மீனவர்களே நேரடியாக முரண்படும் நிலையை ஏற்படுத்தி உயிர்களை வலிந்து பறிக்கும் நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது. அதுமாத்திரமல்லாது பாரிய சமூக முரண்பாட்டை தோற்றுவிக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

ஆகவே சம்பந்தப்பட்ட அமைச்சரும் ஜனதிபதியும் இதுவிடயத்தில் உடனடியாக தலையிட்டு சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகளை முற்றாக நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என வடக்கு கடற்றொழில் சமூகம் சார்பில் வலியுறுத்தி கேட்டுக்கொள்கின்றோம்.” என்றார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இருக்கும்போது மாத்திரமல்ல, அவர் மறைந்த பின்னர் அவரது புகழுடலுடன் யாழ்ப்பாணம் வரை சென்று வந்து, கடைசி வரை அவருக்குப் பக்கத்தில் இருந்தவன் நான். எனக்குக் கூட ஒரு சொல் தகவல் தராமல் இந்தப் பம்மாத்து நிகழ்ச்சி நடைபெற்று இருக்கின்றமை குறித்து ஏற்பாட்டாளர்கள் சிலருக்கு கோபத்துடன் பேசினேன்" – என்றார் அவர்.

'அமரர் இரா.சம்பந்தன் ஐயா உயிரோடு இருக்கும்போது, அவருடன் கூட இருந்து குழி தோண்டிய கோடாரிக்காம்புகளால் நடத்தப்பட்ட நினைவேந்தல் நிகழ்வு இது ' – என்று திருகோணமலையின் முக்கிய பிரமுகர் ஒருவர் தமது முகப்புத்தகத்தில் வேதனையுடன் சுட்டிக்காட்டி இருந்தார்.

ஐயா உயிரோடிருந்த போதும் 49 தடவைகள் தொலைபேசி அழைப்பு எடுத்த சமயத்திலும் பதிலளிக்காமல் புறக்கணித்து உதாசீனப்படுத்தினார்கள். முன்னாள் நகர பிதா இராசநாயகன் மூலம் தொலைபேசி எடுத்துச் சென்று கொடுத்த போது கூட, அந்தத் தொலைபேசியில் சம்பந்தன் ஐயாவுடன் பேச மறுத்து அகங்காரமாக நடந்து கொண்டார்கள். அவர்களே இப்போது சம்பந்தனுக்காக நீலிக் கண்ணீர் வடிப்பது வேடிக்கை என்ற சாரப்பட அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

உண்மைதான். அரசியல் என்றால் நாடகமும் நடிப்பும் தானே.....! அதைத் தான் சம்பந்தருக்கு நினைவேந்தல் என்ற பெயரில் நடத்தி முடித்திருக்கிறார்கள் – கடைசி நேரத்தில் சம்பந்தனின் காலை வாரிய பிரகிருதிகள்.

* * *

வடக்கில் மேலதிக அரச அதிபர் நியமனங்கள் என்பது இப்போது பெரும் சர்சையாகவே காணப்படுகின்றது. அது இன்னும் பூதாகாரப் பிரச்சினையாக மாறக்கூடிய நிலைமையே நீடிக்கின்றது.

வடக்கின்ஐந்துமாவட்டங்களில்நான்கு மாவட்டங்களில் மேலதிக அரச அதிபர் வெற்றிடங்கள் இன்று வரை நிரப்பப்படவில்லை.

மாவட்டங்களில் மேலதிக அரச அதிபர் என்னும் பதவியில் இருவர் இருப்பர். அவர்களில் ஒருவர் – பெரும்பாலும் சிரேஷ்ட நிலையில் இருப்பவர் – நிர்வாகத்தைக் கையாள்வார். மற்றவர் 'மேலதிக அரச அதிபர் – காணி' என்ற பணிநிலையில் இருப்பார்.

இதற்கமைய ஒரு மாவட்டத்தில் தற்போது மேலதிக அரச அதிபர் பதவியை ஒருவர் கோரியபோதும், அது அவருக்கு வழங்கப்படாமல், அவரை விட சேவைக் கால பட்டியலில் பின் நிலையில் இருந்தவருக்கு அந்தப் பதவி வழங்கப்பட்டுள்ளது. அதனால் விசனமுற்றிருக்கும் அவர், அந்த அடிப்படையில் தான் தொடர்ந்தும் மாவட்ட நிர்வாகத்தில் இருக்க விரும்பவில்லை என்னும் முடிவை எழுத்தில் வழங்கவுள்ளார்.

இதேபோன்று இன்னுமொரு வடக்கு மாவட்டத்தில், மூத்தவராகத் தானே இருப்பதனால் மேலதிக அரச அதிபர் – நிர்வாகத்தை தன்னிடம் வழங்க வேண்டும் என ஒருவர் விண்ணப்பித்தபோதும், மேலதிக அரச அதிபர் – காணிக்குரிய பணியில் இருப்பவருக்கு வழங்க அது முன்மொழியப்பட்டமை தவறு என்கின்றார் அவர்.

மூன்றாவது மாவட்டத்தில் மேலதிக அரச அதிபர் பதவி உயர்வு பெற்றுச் சென்றதும் புதியவர் நியமிக்கப்பட்டார். ஆனால் அந்த மாவட்டத்தில் 2003 ஆம் ஆண்டு நிர்வாக சேவையில் இணைந்தவர் இருக்கும்போது 2009இல் நிர்வாக சேவைக்குள் உள் வாங்கப்பட்டவருக்கே மேலதிக அரச அதிபர் பதவி வழங்கப்பட்டதாகக் குற்றம் சாட்டப்படுகின்றது.

நான்காவது மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் இரு மேலதிக அரச அதிபர் பதவிகளும் வெற்றிடமானமையால் அங்கே மட்டுமே சரியான முறைமை பின்பற்றப்பட்டு, சேவையில் முதலிடத்தில் இருப்பவருக்கு மேலதிக அரச அதிபர் – நிர்வாகம் என்ற பதவியும், இரண்டாவது இடத்தில் இருப்பவருக்கு மேலதிக அரச அதிபர் – காணி என்ற பதவியில் நியமனம் செய்ய முற்பட்டபோது இரண்டாம் இடத்தில் இருப்பவர் தற்போது அப்பதவியைத் தான் பொறுப்பேற்பதில் சில சிரமங்கள் இருப்பதாக தெரிவித்தமையால், மாவட்டத்தில் 3 இடத்தில் உள்ள நிர்வாக அதிகாரியை மேலதிக அரச அதிபர் காணிக்கான பதவியில் நியமிக்குமாறு இன்று பரிந்துரைக்கப்படவுள்ளார் எனத் தெரிய வந்தது.

# பருத்தித்துறை விபத்தில் வயோதிபர் படுகாயம்

(எஸ்.ரகுதீஸ்)

பருத்தித்துறை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட வல்லிபுரம் பகுதியில் இடம் பெற்ற விபத்து சம்பவத்தில் வயோதிபர் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை வல்லிபுர ஆழ்வார் வீதியால் பயணித்த வயோதிபரை பட்டா வாகனம் மோதியதாக தெரிவிக்கப்பட்டது.

இதில் படுகாயமடைந்த புலோலி, வல்லிபுரக்குறிச்சியைச் சேர்ந்த பொன்னையா தேவராசா(வயது71) என்ற வயோதிபர் படுகாயம் அடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## குளத்தில் மூழ்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிரிழந்துள்ளனர்.

மூன்று சிறுவர்களும் உறவினர்களுடன் நேற்று மீன் பிடிக்கச் சென்ற வேளையிலே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

பனிச்சங்கேணியைச் சேர்ந்த சிறுமிகள் இருவரும், சிறுவன் ஒருவரும் இதன்போது உயிரிழந்துள்ளனர்.

க.சானுஜன் (வயது 12), க.டிக்ஷனா (வயது 10), ஜெ.ருக்ஷானா (வயது 10) ஆகிய மூன்று சிறுவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் மூவரும் பணிச்சங்கேணி திருமகள் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களாவர்.

உயிரழந்த மூவரும் குளத்தின் கரையோரத்தில் குழி தோண்டி விளையாடிக் கொண்டிருந்தபோது குளத்தில் காணப்பட்ட பாரிய குழியில் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளனர் என்று உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போது கோடை காலமானதால் குளத்தில் நீர் மட்டம் குறைந்து காணப்படுவது வழக்கமாகும். இந்தக் காலங்களில் குளத்தில் மீன்பிடித் தொழில் ஈடுபடுபவர்கள் சிலர் தங்களது குடும்ப சகிதம் அந்தப் பகுதிக்குச் சென்று தங்கி நின்று இரவு பகலாக மீன்பிடித் தொழில் ஈடுபட்டு வருவது வழக்கமாகும். இவ்வாறான நிலையிலேயே இந்தச் சம்பவம் அந்தப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர்களின் சடலங்கள், பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் வாகரை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சித்துப்பாத்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழி தொடர்பான இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் 11 ஆம் நாள் அகழ்வு நேற்று நடைபெற்றது.

இதன்போது மனிதப் புதைகுழி அடை யாளம் காணப்பட்ட பகுதியைச் சூழ உள்ள இடத்தில் சிரமதானப் பணிகளும் இடம்பெற்றன. மனிதப் புதைகுழி அகழ்வு இடம்பெறும் குழிக்குள் மழை நீர் தேங்காது வெளியேறுவதற்கான முன்னேற்பாடாக ஜே.சி.பி. இயந்திரம் மூலம் குழிகளும் கிண்டப்பட்டன. அந்தக் குழிகளிலும் மனித என்பு எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இவை தொடர்பான ஆய்வுப் பணிகள் தொடர்சியாக இன்று இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும், செம்மணி மனிதப் புதைகுழிக்கு அருகில் வேறு புதைகுழிகள் இருக்கலாம் எனச் செய்மதிப் படங்கள் மூலம் சில பகுதிகள் சந்தேகத்தின் அடிப்படையில் அடையாளப்படுத்தப்பட்டுத் தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவாவினால் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்து.

அந்தப் பகுதிகள் நீதிமன்ற உத்தரவுக்கமைய யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் தொல்லியல் துறை மாணவர்கள் மற்றும் நல்லூர் பிரதேச சபையின் பணியாளர்கள் ஆகியோரின் உதவியோடுஅகழ்வுப்பணிகள்கடந்தஇரண்டாம் திகதி ஆரம்பமாகின.

அந்தப் பகுதியில் கடந்த 4ஆம் திகதி அகழ்வின்போது சிறுமியின் ஆடை ஒன்று அகழ்ந்து எடுக்கப்பட்டிருந்தது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அகழ்வில் மண்டையோடு ஒன்றும் அடையாளம் காணப்பட்டது. எனினும், நேற்று அரை நாள் மாத்திரமே அகழ்வுப் பணி இடம் பெற்றதால் அந்தப் பகுதியில் அகழ்வு நடவடிக்கை இடம்பெறவில்லை. இன்று குறித்த பகுதியிலும் அகழ்வுப் பணி தொடர்ச்சியாக இடம்பெறவுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்றைய அரைநாள் அகழ்வின் போது இரண்டு என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. அதற்கமைய செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை 47 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் இதுவரை 44 என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.



# திருக்கோவில் சித்திரவேலாயுதர் ஆலயத்தில் இன்று ஆடி அமாவாசை உற்சவக் கொடியேற்றம்



(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப்பிரசித்தி பெற்ற திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுதசுவாமி ஆலயத்தின் வருடாந்த ஆடிஅமாவாசை உற்சவத்தின் கொடியேற்றத்திருவிழா இன்று 07ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறுகின்றது .

தொடர்ந்து 18 நாள்கள் திருவிழாக்கள் இடம்பெற்று ஆடி அமாவாசை தீர்த்தோற்சவம் ஜுலை மாதம் 24ஆம் திகதி வியாழக்கிழமை சமுத்திரத்தில் நடைபெறும்.அதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என ஆலய பரிபாலன சபையின் தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் தெரிவித்தார்.

அன்றைய தினம் முன்னோர்களுக்கான பிதிர்க்கடன் செலுத்தும் முக்கியமான கிரியை அங்கு நடைபெறுவது வழமையாகும்.

இதேவேளை, திருவிழா தொடர்பான அதிகாரசபைக்கூட்டம் பஞ்சாயத்து கூட்டம் மற்றும் பிரதேச செயலக முன்னோடிக் கூட்டம் என்பன நடைபெற்றுள்ளன.

இந்தவருடத்திற்கான ஆடி அமாவாசை உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, 24ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவுள்ளது. மறுநாள் 25ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவும் வள்ளி திருமணமும் நடைபெறும்.

தொடர்ந்து மறுநாள் 26ஆம் திகதி வயிரவர் பூஜையுடன் உற்சவம் நிறைவடையவுள்ளது. ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சண்முகமகேஸ்வரக்குருக்கள் முன்னிலையில் ஆலயகுரு சிவஸ்ரீ நீதி. அங்குச நாதக்குருக்கள் தலைமையில் உற்சவம் நடைபெறவுள்ளது என்று ஆலய தலைவர் சுந்தரலிங்கம் சுரேஸ் மேலும் தெரிவித்தார்.







# ஊடகவியலாளர் மீதான தாக்குதல் தொடர்பில் சந்தேக நபரைக் கைது செய்ய மன்று உத்தரவு

(பாறுக் ஷிஹான்)

சிரேஷ்ட ஊடகவியலாளர், “நாம் ஊடகர் பேரவை“யின் தலைவர் யூ.எல்.மப்றூக் மீது தாக்குதல் நடத்தியவர்கள் எனக் கருதப்படும் சந்தேக நபர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு, அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

அட்டாளைச்சேனையை சேர்ந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் யூ.எல். மப்றூக், கடந்த 02 ஆம் திகதி இரவு, தனது நன்பர்களுடன் அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்துக்கு அருகில் பேசிக் கொண்டிருந்த போது, முஸ்லிம் காங்கிரஸின் அட்டாளைச்சேனை பிரதேச சபை உறுப்பினர் றியா மசூர் தலைமையில் அங்கு வந்த குழுவினால் தாக்கப்பட்டார் எனக் கூறப்படுகின்றது.

தாக்குதல் நடந்த சந்தர்ப்பத்தில் – றியா மசூர் உள்ளிட்ட குழுவினர் மது போதையில் இருந்தனர் என இச்சம்பவம் குறித்து அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில் ஊடகவியலாளர் மப்றூக் செய்துள்ள முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்த நிலையிலேயே சந்தேக நபரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துமாறு நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார். ஆயினும் சந்தேக நபர்கள் தலைமறைவாகியுள்ளனர். அவர்களைக் கைது செய்யும் முயற்சியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரியவருகிறது.

# சிங்கப்பூர், மலேசிய ஹொட்டேல் வேலை வாய்ப்புடன் கூடிய விருந்தோம்பல் கற்கை நெறி ‘சிகரம்’ ஏற்பாட்டில் ஆரம்பம்!

## 12வது அணியின் பயிற்சி நேற்று முன்தினம் அங்குரார்ப்பணம்







**SIKARAM ACADEMY School Of Hospitality** யின் 12 ஆவது அணி நேற்று முன்தினம் ஜீலை 5 சனிக்கிழமை காலை உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

**Green Grass - Valampuri Hotel** இன் **VIP Lounge** இல் இந்த புதிய அணியை, “சிகரம்”நிறுவனத்தின்நிறுவுநரும், நிறைவேற்றுப் பணிப்பாளரும், இளையோர் ஊக்குவிப்பு பயிற்றுவிப்பாளருமான கோ.றுஷாங்கன் அங்குரார்ப்பணம் செய்தார்.

இந்த அணியில், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர் – யுவதியர் இணைந்துகொண்டுள்ளனர்.

விருந்தோம்பல்துறை பயிற்சி வரலாற்றில் முதல் தடவையாக, ஒரு உல்லாச விடுதிக்கு உள்ளேயே மாணவர்களுக்கு நேரடிப் பயிற்சிகளுடன் கூடிய கற்கை நெறியாக **SIKARAM ACADEMY School Of Hospitality**யின் 12 ஆவது அணிக்குரிய கற்கைநெறி நடாத்தப்படவுள்ளது.

இந்தக் கற்கைநெறியில் இணைந்துள்ள மாணவர்கள் உள்நாட்டு ஹொட்டேல்களிலேயே வேலைவாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன், சிங்கப்பூர் **International Management and Sports College** மலேசியாவிலுள்ள உலகளாவிய வலைப்பின்னலைக் கொண்ட **YTL Hotels** உடன் இணைந்து வழங்கும் வருமானத்துடன் கூடிய ஹொட்டேல் பயிற்சி, வேலைவாய்ப்பு என்பவற்றுடன், **YTL Hotels** இன் **UK, Australia** வலைப்பின்னலுக்கு வேலைவாய்ப்புடன் செல்வதற்கான வாய்ப்புக்களையும் பெற்றுக் கொள்ள முடியும்.

வடக்கு மாகாண இளைஞர் –யுவதியருக்கு தொழிற்றிறன் பயிற்சிகளுடன் வேலைவாய்ப்புகளை பெற்றுக்கொடுப்பதன் மூலம் வடக்கின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் 2009ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சிகரம் நிறுவனம், 2015ம் ஆண்டு முதல் 11 அணிகளாக 250க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு விருந்தோம்பல் முகாமைத்துவ பயிற்சிகளை வழங்கி நூறுக்கும் மேற்பட்டவர்களுக்கு உள்நாட்டு–வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களையும் பெற்றுக்கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## வருமா மனமாற்றம்?

கடந்த ஆறு ஆண்டு காலத்தில் இலங்கை அரசியலிலும் முக்கிய பிரமுகராகக் கருதப்படும் மதத் தலைவர் என்ற நிலையை எட்டியவர் கொழும்பு பேராயர் வணக்கத்துக்குரிய கர்தினால் மல்கம் ரஞ்சித்.

அவரின் ஐம்பதாவது வருட குருத்துவ சேவையை நினைவு கூரும் நிகழ்வு இன்று மாலை கொழும்பு பொரளையில் உள்ள பேராயர் இல்லத்தில் நடைபெறுகிறது. முக்கிய மதப் பிரமுகர்கள், அரசு அதிகாரிகள், மதகுருமார், அரசியல் தலைவர்கள் உட்பட ஏராளமான அழைப்பாளர்கள் இந்த நிகழ்வில் இன்று கலந்து கொள்ள இருக்கிறார்கள்.

குறிப்பாக கிறிஸ்தவர்களை இலக்கு வைத்து 2019 ஆம் ஆண்டில் ஈஸ்டர் ஞாயிறு தினத்தில் நடத்தப்பட்ட கொடூரமான தொடர் குண்டு தாக்குதலினால் 275 க்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். ஐந்நூறு பேர் வரை படுகாயம் அடைந்தனர்.

இந்த தாக்குதல் சம்பவத்தை அடுத்து நாட்டில் கிறிஸ்தவ மத பீடத்தின் உயர் தலைவரான கர்தினால் மல்கம் ரஞ்சித் நாட்டில் மிக முக்கிய பிரமுகரானார். தமது மதத்தின் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி வேண்டி அவர் தளராது குரல் கொடுத்து வருகிறார்.

ஆயினும், அவரும் ஏனைய நாட்டு மக்களும் எதிர்பார்த்த மாதிரி அந்தக் கொடூரத்துக்கான நீதி இன்னும் கிட்டவே இல்லை என்பதுதான் யதார்த்தப் புறநிலைமை. தாக்குதலின் சூத்திரதாரிகள் அம்பலப்படுத்தப்படவில்லை. உண்மைகள் வெளிப்படுத்தப்படவில்லை. பொறுப்பு கூறல் நிலைநாட்டப்படவில்லை.

இந்தக் குண்டுவெடிப்பின் பின்னர் நான்காவது ஜனாதிபதி பதவிக்கு வந்துவிட்டார். மூன்றாவது அரசு அதிகாரத்துக்கு வந்துவிட்டது. ஆயினும் நீதி தேடும் முயற்சி இன்னும் பலனளிக்கவில்லை என்பதுதான் உண்மை.

நீதி பெறுவதற்கான காலக்கெடுக்கலை பல தடவைகள் விதித்து பேராயர் முன்வைத்த அறிவிப்புக்கள் அவமாகி போய் நிற்பதைக் காண்கின்றோம்.

இலங்கை தீவில் மற்றொரு சிறுபான்மையினரான தமிழர்களுக்கு எதிராக மிக மோசமான - மிகக் கொடூரமான - மிகக் குரூரமான - காட்டுமிராண்டித்தனமான - போர் அத்துமீறல்கள் அவிழ்த்து விடப்பட்டபோது, பாதிக்கப்பட்ட அந்தத் தமிழ் மக்களுக்காக நீதி வேண்டி குரல் எழுப்ப மறுத்து நின்றவர் இந்தப் பேராயர்.

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு - தமது கண்முன்னே நடந்த கொடூரங்களுக்கு - குரல் எழுப்ப மாட்டேன் என்று அடம்பிடித்து வந்த மதத் தலைவர் அவர் என்பதை தமிழ் மக்கள் மறந்து விடமாட்டார்கள்.

பெரும் போர்க் கொடூரமாக - யுத்தக் குற்றங்களாக - மனித குலத்துக்கு எதிரான மோசமான நடவடிக்கைகளாக - மனித உரிமை மீறல்களாக - தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிக்கு நியாயம் கேட்க மறுத்து, ஈஸ்டர் ஞயிறு குண்டு தாக்குதல் விடயத்திற்கு மாத்திரம் நீதிக்காக போராடும் அவரின் செயல் ஒரு கண்ணில் சுண்ணாம்பும் மறு கண்ணில் நெய்யும் தடவும் இரட்டைப் போக்கை ஒத்தது.

இந்தப் பாரபட்சமான - முரண்பாடான - குழப்பமான - நிலைப்பாட்டை அவர் எடுத்தமையினால் என்னவோ ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் இன்னும் நீதி கிட்டவில்லைப் போலும்.

அவரது ஐம்பதாவது குருத்துவ சேவையை ஒட்டி நடைபெறும் இன்றைய நிகழ்வின் பெறுபேறாக பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கும் குரல் எழுப்பும் மனமாற்றத்தை அவருக்குள் இயேசு ஏற்படுத்துவாரானால் அந்த மனமாற்றம் பாதிக்கப்பட்ட தமிழருக்கான நற்செய்தியாக இருக்கும்.





# வவுனியா வடக்கில் 600 ஏக்கருக்கு மேற்பட்ட தமிழரின் பூர்வீகக் காணிகள் பறிபோகின்றன!

## அபாயக் குரல் எழுப்பும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னனி

(கி.வசந்தன்)


மகாவலி குடியேற்றத் திட்டத்தின் மூலம் வவுனியா வடக்கில் புதிதாக தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் 600 ஏக்கர் பறிபோகும் அபாய நிலை ஏற்பட்டுள்ள தாக தமிழ் தேசிய மக்கள் முன்னனி யினர் நேற்றுத் தெரிவித்துள்ளனர்.


தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் எஸ்.தவபாலன், கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களான வவுனியா வடக்குப் பிரதேச சபை உப தவிசாளர் சஞ்சுதன், வவுனியா மாநகர சபை உறுப் பினர் தர்மா, வவுனியா வடக்கு பிரதேச சபை உறுப்பினர் தமிழ்ச்செல்வன் மற் றும் பிரதீபன் உள்ளடங்கிய கட்சி உறுப் பினர்கள் மற்றும் காணி உரிமையா ளர்கள் ஆகியோர் இந்த நிலங்களை சென்று பார்வயிட்ட பின்னரே இவ்வாறு தெரிவித்தனர்.

வவுனியா வடக்கில் தமிழ் மக்களின் எல்லைக் கிராமங்களின் ஒன்றான வெடி வைத்தகல்லு, திரிவைச்சகுளம் மற்றும் அதற்கு கீழான 600 ஏக்கருக்கும் மேலான வயல் காணிகள் சிங்கள மக்களினால் தற்போது ஆக்கிரமிக் கப்பட்டுள்ளன. எந்த ஒரு வகையான காணி ஆவணங்களும் இல்லாமல் இந் தக் காணிகள் எல்லையோர சிங்கள மக்களினால் சத்தமில்லாமல் ஆக்கிரமிக் கப்பட்டிருக்கின்றன. இந்த ஆக்கிரமிப்பு மிக வேகமாக வெடிவைத்தகல்லு சந்தி வரை நகர்ந்து வந்து கொண்டிருக்கின் றது.

இந்தக் காணிகளை மகாவலி

தொடர்ச்சி▼


தீர்ப்பு
24.10.2023
JUL 2025
Page 1 of 7








# வவுனியா வடக்கில் 600 ஏக்கருக்கு மேற்பட்ட தமிழரின் பூர்வீகக் காணிகள் பறிபோகின்றன!

## அபாயக் குரல் எழுப்பும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னனி

தொடர்ச்சி▲

திட்டத்தின் கீழ் உள்வாங்கும் நோக்கோடு வனவளத் திணைக்களம் மற்றும் இராணுவத்தினரின் ஆதரவுடன் காடுகள் அழிக்கப்பட்டு குறித்த நிலப்பகுதி ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றது. இந்த நிலமானது தமிழ் மக்கள் யுத்தத்திற்கு முன்னர் விவசாயம் செய்த நிலங்களாகும். அந்த நிலங்களின் உரிமையாளர்கள் கடந்த 2020 ஆம் ஆண்டு இந்தக் காணிகளை துப்பரவு செய்த போது வனவளத் திணைக்களம் அவர்களை கைது செய்து நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்தது. அதன்பின் நீதிமன்றத்தினால் 2022 ஆம் ஆண்டு மேற்படி காணி உரிமையாளர்கள் நிரபராதிகள் என வழக்கில் இருநது விடுவிக்கப்பட்ட பின்னரும் காணிகளைத் துப்பரவு செய்ய பாதுகாப்பு தரப்பினரும், வனவளத் திணைக்களமும் அனுமதி வழங்காது தடையை ஏற்படுத்தி வந்திருந்தனர்.

தற்போது இந்தக் காணி இடங்கள் உள்ளடங்கலாக 600 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்கள், காடுகள் அழிக்கப்பட்டு பெரும்பான்மை சிங்கள மக்களால் கையகப்படுத்தப்பட்டு வருகின்றன. கொக்கச்சான்குளம் ஆக்கிரமிக்கப்பட்டு கலாபோகஸ்வேவ ஆக மாறியது போன்று தற்போது திரிவைத்த குளம் ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றது. ஆட்சி மாறிய போதும் தென்னிலங்கை அரசாங்கத்தின் மனநிலையில் மாற்றம் வரவில்லை. எனவே இதனை உடனடியாக தடுத்து நிறுத்த அனைத்து தமிழ் மக்களும் ஓரணியில் அணி திரண்டு எதிர்த்து குரல் கொடுக்க வேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னனியினர் தெரிவித்துள்ளனர்.










# அநீதியான முறைகளில் காணிகளைக் கபளீகரம் பண்ண அரசு துணைபோகாது என ஜெகதீஸ்வரன் எம்.பி. உறுதி

## வவுனியா வடக்குக் காடழிப்பு தொடர்பில் விசாரணை நடத்தப் பணிப்புரையாம்



(கி.வசந்தன்)

அநீதியான முறையில் காணிகளைக் கையகப்படுத்துவதற்கு அரசாங்கம் துணைபோக மாட்டாது. வவுனியா வடக்கு, வெடிவைத்தகல்லு காடழிப்புத் தொடர்பில் விசாரணை நடத்தி ஒரு வாரத்திற்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறும், சம்மந்தப்பட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்துமாறும் பணிப்புரை வழங்கியுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் உள்ள தேசிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று இரவு இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

தொடர்ச்சி▼






# அநீதியான முறைகளில் காணிகளைக் கபளீகரம் பண்ண அரசு துணைபோகாது என ஜெகதீஸ்வரன் எம்.பி. உறுதி

## வவுனியா வடக்குக் காடழிப்பு தொடர்பில் விசாரணை நடத்தப் பணிப்புரையாம்

தொடர்ச்சி▲

மக்களது கோரிக்கைக்கும், முறைப்பாட்டுக்கும் அமைய வவுனியா, நெடுங்கேணி பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட வெடிவைத்தகல்லு கிராம அலுவலர் பிரிவில் உள்ள திரிவைத்தகுளம் என்ற பகுதியில் திட்டமிடப்பட்ட காடழிப்பு இடம்பெறுகின்றது என்ற முறைப்பாட்டுக்கு அமைய நான் நேரடியாக கலாபோகஸ்வேவ பொலிஸார், வவுனியா வடக்கு பிரதேச சபை உறுப்பினர் அகிலன் உள்ளிட்ட குழுவினர் நேரடியாக சென்று பார்வையிட்டோம்.

பாரியளவில் திட்டமிடப்பட்ட வகையில் காடுகள் அழிக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் 35 – 40 ஏக்கர் காடு முழுமையாக அழிக்கப்பட்டுள்ளது. மகாவலி எல் வலய அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு கேட்ட போது அவர்களால் இது தொடர்பில் எந்தவித அனுமதியும் எவருக்கும் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்தனர். அவர்களுக்கும் முறைப்பாடுகிடைத்துள்ளதாகவும்இதுதொடர்பில் பொலிஸாருக்கு முறையிட்டுள்ளனர் எனவும் தெரிவிததனர்.

வனவளத் திணைக்களத்திடம் கேட்ட போது அவர்களும் அனுமதி வழங்கவில்லை என்றனர். வனவளத் திணைக்களம் மற்றும் மகாவலி அதிகார சபையினர் இணைந்து இது தொடர்பாக பரிசோதனை நடத்தவுள்ளனர். ஒரு வாரத்திற்குள் இது தொடர்பான ஒரு அறிக்கையை சமர்ப்பிக்குமாறும், அதனுடன் தொடர்புடையவர்களை சட்டத்தின் முன் நிறுத்தித் தண்டனையை பெற்றுக் கொடுக்குமாறும் பணிப்புரை வழங்கியுள்ளேன். முன்னாள் அரசாங்கத்தின் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஒருவருடைய தலைமையில் இக்காடழிப்பு இடம்பெற்றதாக அப்பகுதி மக்கள் எமக்குக் கூறியுள்ளனர்.

இது தொடர்பாக வவுனியா அரசாங்க அதிபர் மற்றும் வவுனியா வடக்கு பிரதேச செயலாளருக்கும் தெரியப்படுத்தியுள்ளோம். இது தொடர்பில் எமது அரசாங்கம் தெளிவாகவுள்ளது. இந்த நடவடிக்கை இரண்டு வாரத்திற்கு முன்பாக இடம்பெற்றுள்ளதாக நினைக்கின்றேன். பாரிய மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் இவ்வாறான நடவடிக்கைகள் இடம்பெறாது.

இவ்வாறான சம்பவங்கள் இனி இடம்பெறாத வகையில் நடவடிக்கைகளை எடுக்குமாறு அரச அதிகாரிகளிடம் பணிப்புரை வழங்கியுள்ளோம். எப்பொழுதும் மக்கள் நலன் சார்ந்தே எமது அரசாங்கம் செயற்படும். இங்கு இடம்பெற்ற முறைகேடான செயற்பாட்டுக்கு விரைவாக தீர்வு வழங்கவுள்ளோம். இதனை நாடாளுமன்றக்கூட்டத்திலும் தெரியப்படுத்தி வனவளத்துறை அமைச்சரிடம் நேரடியாக சமர்பித்து விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு கோருவோம்.

மக்களுடைய காணிகள் எதுவாக இருந்தாலும் இவ்வாறு அநீதியான முறையில் கையகப்படுத்துவதற்கு அரசாங்கம் துணைபோக மாட்டாது. இதைப் பயன்படுத்தி பொருத்தமற்ற அரசியல் நடவடிக்கைகளை செய்வதை தவிர்க்க வேண்டும். எலலோரும் ஒன்று சேர்ந்து காடுகளை பாதுகாக்க வேண்டும். இது போன்ற நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்றால் உடனடியாக எமக்கு தெரியப்படுத்தவும். நாம் நடவடிக்கை எடுப்போம். – எனவும் தெரிவித்தார்.



# கிளிநொச்சி கல்வி வலயப் பாடசாலை காவலாளியின் பெயரில் நிதி மோசடி!

(ந.லோகதயாளன்)

கிளிநொச்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட புதுமுறிப்பு பாடசாலை இரவுக் காவலாளியின் பெயரில் முற்பணம் பதிந்து, அக்கராயன் பாடசாலை ஆசிரியை ஊடாக மோசடியில் ஈடுபட்டனர் எனக் கூறப்படும் கல்வித் திணைக்கள அதிகாரிகள் தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்தில் புதுமுறிப்பு பாடசாலையின் இரவுக் காவலாளி கடனிற்கு விண்ணப்பிக்காத போதும் காவலாளியின் பெயரில் ஓர் கடன் கோரல் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டு கடன் அனுமதி பெறப்பட்டுள்ளது. அவ்வாறு பெறப்பட்ட தொகைக்கான பணம் காசோலையாக அனுமதிக்கப்பட்டு அக்கராயன் பாடசாலையில் கற்பிக்கும் ஓர் ஆசிரியையின் வங்கி கணக்கில் ஒரு லட்சத்து 17 ஆயிரம் ரூபா வைப்புச் செய்யப்பட்டுள்ளது.

அக்கராயன் பாடசாலை ஆசிரியையின் கணக்கிற்கு வைப்புச் செய்த கடனிற்கான தீர்ப்பனவுப் பணம் அந்த ஆசிரியையின் சம்பளத்தில் இருந்து கழிக்கப்படாது, புதுமுறிப்பு பாடசாலையின் காவலாளியின் சம்பளத்தில் இருந்தே கழிக்கப்பட்டு வந்துள்ளது. இவ்வாறு பணம் கழிக்கப்படுவது தொடர்பிலோ அல்லது தனது பெயரில் கடன் பெறப்பட்டுள்ளமை தொடர்பிலோ எதனையும் காவலாளி அறிந்திருக்கவில்லை.

காவலாளியின் மனைவியும் ஓர் ஆசிரியர் என்பதனால், 2025 ஆம் ஆண்டு சம்பள அதிகரிப்பின்போது விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபார்சிற்கு ஏற்ப மாகாண கல்வி அமைச்சு தற்போது விசாரணை ஒன்றிற்கு உத்தரவிட்டுள்ளது.

புதுமுறிப்பு பாடசாலை காவலாளியின் கடன் விண்ணப்பம் அப்பாடசாலையின் அதிபரின் சிபார்சுடனேயே வலயத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அதே நேரம், இக் கடனை 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அக்கராயனில் உள்ள பாடசாலை ஒன்றில் பணியாற்றும் ஆசிரியரின் பெயரிற்கு சிபார்சு செய்து காசோலை வரைந்து, கணக்காளரின் இறப்பர் முத்திரையைக் குற்றி, போலிக் கையெழுத்து வைத்தே காசோலை வழங்கப்பட்டிருப்பதாக இப்போது கூறப்படுகின்றது. இந்த வேலையைச் செய்தவர் எனக் கருதப்படும் உத்தியோகத்தர் தற்போது பதவி உயர்வு பெற்று வடக்கு மாகாண சபைக்கு உள்பட்ட திணைக்களம் ஒன்றில் பணியாற்றுகின்றார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அந்த உத்தியோகத்தருடன் நெருக்கமாகப் பழகும் அக்கராயன் பாடசாலை ஆசிரியரின் வங்கிக் கணக்குக்கே அந்தப் பணம் வரவு வைக்கப்பட்டுள்ளது என்பது தற்போது கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறு விடயங்கள் அம்பலப்பட்டு வருவதனை அறிந்த அக்கராயன் பாடசாலை ஆசிரியர் தனது வங்கி கணக்கிற்கு 2024 மார்ச் மாதம் வைப்பிலிட்ட முழுப் பணத்தையும் 2025 ஆம் ஆண்டு ஜுன் மாத இறுதியில் வலயக் கல்வி அலுவலகத்தில் செலுத்தியுள்ளார்.

கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்தில் பணியாற்றி வடக்கு மாகாண சபைக்கு பதவி உயர்வில் சென்ற மேற்படி நிதிசார் உத்தியோகத்தர் முன்னர் வவுனியா வடக்குக் கல்வித் திணைக்களத்தில் பணியாற்றியமையும் குறிப்பிடத்தக்கது.

# திருக்கோவில் முன்னாள் தவிசாளர் உதயகுமார் படுகொலை தொடர்பிலேயே இனியபாரதி கைது

## அவரது சகா தவசீலனும் சிஐ.டியினரின் வலைக்குள்



திருக்கோவில் முன்னாள் தவிசாளர் உதயகுமார்



இனியபாரதி

(கனகராசா சரவணன்)

அம்பாறை, திருக்கோவில் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் உதயகுமார் துப்பாக்கியால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அம்பாறை மாவட்ட பொறுப்பாளரும் முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினருமான இனியபாரதி என்றழைக்கப்படும் கே. புஷ்பகுமார் திருக்கோவிலில் வைத்தும், அவரது சகாவான சசீதரன் தவசீலன் மட்டு. சந்திவெளியில் வைத்தும் கொழும்பில் இருந்து வந்த குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் தமிழரசுக் கட்சி சார்பில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்ட வெற்றி பெற்று திருக்கோவில் பிரதேச சபையின் தவிசாளராக உதயகுமார் பதவியேற்றார்.

இந்த நிலையில் கடந்த 2007-6-28 ஆம் திகதி விநாயகபுரத்தில் உள்ள அவரது வீட்டில் இருந்து திருக்கோவிலுள்ள பிரதேச சபையை நோக்கிப் பிரயாணித்த போது அவர் விநாயகபுரம் கோரக்களப்பு வீதியில் வைத்து இனம் தெரியாத துப்பாக்கிதாரிகளால் துப்பாக்கியால் சுடப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

இந்த நிலையில் அவரது மனைவி, படுகொலை செய்யப்பட்ட தனது கணவருக்கு நீதி கோரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். இந்த விசாரணை கடந்தகால அரசாங்கத்தினால் கிடப்பில் இருந்து வந்துள்ளது.

இதனையடுத்து இந்த முறைப்பாடு தொடர்பாக அவரது மனைவி சிஐ.டியினரிடம் மீண்டும் முறைப்பாடு தெரிவித்தமையை அடுத்து அவர்கள் விசாரணையை மேற்கொண்டு வந்தனர். இந்த நிலையில் இதனுடன் தொடர்புபட்ட சந்தேகத்தின் அடிப்படையில் இனிய பாரதியையும் அவரது சகாவையும் நேற்று சி.ஐ.டி மற்றும் விசேட அதிரடிப்படை இணைந்து கைது செய்து கொழும்புக்குக் கொண்டு சென்றுள்ளனர் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த 2005 தொடக்கம் 2009 வரை காலப்பகுதியில் திருக்கோவில் மற்றும் விநாயகபுரம் பகுதியில் பலர் கடத்தப்பட்டு காணாமல் போன சம்பவங்கள் தொடர்பாக காணாமல் போன உறவுகள் இனியபாரதி மீது குற்றம் சாட்டிவருவதுடன் அவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

தவிரவும், அக்கரைப்பற்று நீதிமன்றக் களஞ்சியம் எரிக்கப்பட்ட சம்பவம், ஆள் கடத்தல்கள், கப்பம் அறவிட்டமை, சட்டவிரோத ஆயுதங்கள் வைத்திருந்தமை போன்ற பல குற்றச்சாட்டுகள் தொடர்பிலும் இனியபாரதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றார் என்றும் தெரிவிக்கப்பட்டது.





# கற்பிட்டி கல்லடிக் கடல் பகுதியில் கடலட்டைகளுடன் இருவர் கைது

(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

கற்பிட்டிக் கல்லடி கடல் பகுதியில் இலங்கைக் கடற்படை நடத்திய சிறப்புத் தேடுதல் நடவடிக்கையின் போது அனுமதிக்கப்பட்ட அளவை விடவும் அதிகமாகஉலர்ந்தகடலட்டைகளைசட்டவிரோதமாகக் கொண்டு சென்ற இரண்டு நபர்களைக் கைது செய்தமையுடன் 673 கிலோ கிராம் உலர்ந்த கடலட்டைகள் மற்றும் ஒரு டிங்கி படகையும் வெள்ளிக்கிழமை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

கற்பிட்டி கல்லடி கடல் பகுதியில் வடமேற்கு கடற்படை கட்டளையின் இலங்கை கடற்படை கப்பல் விஜயவினால் முன்னெடுக்கப்பட்ட இந்தச் சிறப்புத் தேடுதல் நடவடிக்கையின் போது அந்தக் கடல் பகுதியில் சந்தேகத்துக்கிடமான ஒரு டிங்கி படகு கண்காணிக்கப்பட்டு சோதனையிடப்பட்டது. குறித்த நேரத்தில் செல்லுபடியாகும் உரிமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 250 கிலோ கிராம் வரம்பை விட அதிகமாக – 673 கிலோ – உலர்ந்த கடலட்டைகளை சட்ட விரோதமாக டிங்கி படகில் கொண்டு சென்ற சந்தேக நபர்கள் இருவரை கடற்படையினர் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 37 மற்றும் 49 வயதுடையவர்கள் எனவும் கற்பிட்டி பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இரண்டு சந்தேக நபர்களும் டிங்கி படகு மற்றும் கடலட்டைகள் என்பவற்றுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக புத்தளம் மீன்வள ஆய்வாளரியம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

# வவுனியாப் பள்ளிவாசல் அருகாமையில் புதிதாக கட்டப்படும் வர்த்தக நிலையம்

## கண்டு கொள்ளாத மாநகரசபை நிர்வாகம்





(வவுனியா நிருபர்)

வவுனியா பள்ளிவாசல் அருகாமையில் முறையான அனுமதியின்றி புதிய கடை ஒன்று நிரந்தரமாக வீதியோரமாக அமைக்கப்பட்டு வரும் நிலையில் வவுனியா மாநகரசபை இது தொடர்பில் கவனம் செலுத்தவில்லை எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

வவுனியா நகரின் பல பகுதிகளில் வீதியோர வியாபார நடவடிக்கைகளை வவுனியா மாநகரசபை அகற்றி வருகின்றது. ஆனால் வீதியோரத்தில் பள்ளிவாசல் அருகாமையில் நிலையான கடை கட்டப்பட்டு வருகின்றது. இது தொடர்பில் வவுனியா மாநகர மேயர் சு.காண்டீபனுக்குப் பலரும் முறையிட்டும் எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் சனி, ஞாயிறு விடுமுறை தினத்தை பயன்படுத்தி கட்டப்படும் இந்தக் கட்டுமான நடவடிக்கை இறுதிக் கட்டத்தை அடைத்துள்ளதாகவும் பலரும் குற்றம் சாட்டியுள்ளனர்.

வீதியோர வியாபார நடவடிக்கைகளை அகற்றி வரும் வவுனியா மாநகர சபை பாரபட்சம் காட்டுவதாகவும், முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனின் ஆதரவுடன் மேயர் பதவிக்கு வந்தமையால் முஸ்லிம் வர்த்தகர்கள் வீதியோரத்தில் நிலையான கட்டடம் கட்டி வியாபாரம் செய்ய அனுமதி வழங்கியுள்ளதுடன், தமிழ் வியாபாரிகளை பழி வாங்குகின்றனர் எனவும் பாதிக்கபபட்ட சிறு வியாபாரிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் வவுனியா மாநகர சபை ஆணையாளர் மற்றும் உறுப்பினர்கள கவனம் செலுத்த வேண்டும் எனவும் சிறு வியாபாரிகள் கோரியுள்ளனர்.

# பா.ஜ.கவுக்கு தமிழகம் மீண்டுமொரு மறக்க முடியாத பாடத்தை கற்பிக்கும்

## முதல்வர் ஸ்டாலின் கருத்து



தமிழுக்கும், தமிழகத்துக்கும் செய்துவரும் துரோகத்துக்கு பா.ஜ.க. பரிகாரம் தேடாவிட்டால், தமிழகம் மறக்க முடியாத பாடத்தை மீண்டும் கற்பிக்கும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

"இந்தி திணிப்பை முறியடிக்க தி.மு.கவும், தமிழக மக்களும் தலைமுறை தலைமுறையாக நடத்திவரும் மொழி உரிமை போர், மாநில எல்லைகளைக் கடந்து தற்போது மராட்டியத்தில் சூறாவளியாகச் சுழன்றடித்துக் கொண்டிருக்கிறது. தமிழகப் பள்ளிகளில் 3 ஆவது மொழியாக இந்தியைக் கற்பித்தால்தான் நிதி ஒதுக்குவோம் என்று சட்டத்துக்குப் புறம்பாகவும் அராஜகமாகவும் நடந்துகொள்ளும் பா.ஜ.க, தாங்கள் ஆட்சி செய்யும் மகாராஷ்டிராவில் மக்கள் எழுச்சிக்கு அஞ்சி 2ஆம் முறையாகப் பின்வாங்கி இருக்கிறார்கள். இந்தி திணிப்புக்கு எதிராக சகோதரர் உத்தவ் தாக்கரே தலைமையில் மும்பையில் நடந்த வெற்றிக் கொண்டாட்டப் பேரணியின் எழுச்சியும், உரை வீச்சும் மிகுந்த உற்சாகம் தருகிறது.

உத்தரப்பிரதேசத்திலும், ராஜஸ்தானிலும் கற்பிக்கப்படும் மூன்றாம் மொழி என்ன, இந்தி பேசும் மாநிலங்கள் பின்தங்கி இருக்கின்றன, இந்தி பேசாத முன்னேறிய மாநிலங்களின் மக்கள் மீது ஏன் இந்தியைத் திணிக்கிறீர்கள் என்று ராஜ் தாக்கரே எழுப்பிய கேள்விகளுக்கு, இந்தியையும், சம்ஸ்கிருதத்தையும் வளர்ப்பதையே முழுநேர முன்னுரிமையாக வைத்திருக்கிற மத்திய அரசிடம் எந்த பதிலும் இருக்காது.

மும்மொழிக் கொள்கை என்ற பெயரில் இந்தி-சம்ஸ்கிருதத்தைத் திணிக்கும் புதிய கல்விக்கொள்கையை ஏற்றுக் கொண்டால் மட்டுமே ஒருங்கிணைந்த கல்வித் திட்ட நிதி 2,152 கோடி ரூபாவை விடுவிப்போம் என்று தமிழகத்தைப் பழிவாங்கும் போக்கை மத்திய அரசு மாற்றிக் கொள்ளுமா? தமிழகப் பள்ளிக் குழந்தைகளின் கல்விக்காகச் சட்டப்பூர்வமாக வழங்க வேண்டிய நிதியை உடனே விடுவிக்குமா? இந்தி ஆதிக்கத்துக்கு எதிராகத் தமிழக மக்கள் நடத்திவரும் போராட்டம் உணர்வுமயமானது மட்டுமல்ல, அறிவுப்பூர்வமானது. இந்தி திணிப்பால் ஏராளமான இந்திய மொழிகள் அழிந்த வரலாற்றை அறியாமலும், இந்தியாவை இந்தி நாடாக்கும் செயல்திட்டத்தைப் புரிந்துகொள்ளா மலும், ஹஇந்தி படித்தால் வேலைகிடைக்கும்" என்ற வார்த்தைகளைக் கிளிப்பிள்ளைகளைப் போல ஒப்பித்துக் கொண்டிருக்கும் இங்குள்ள சிலர், இனியாவது திருந்த வேண்டும். மராட்டியத்தின் எழுச்சி அவர்களின் அறிவுக் கண்களைத் திறக்கும்.

தமிழுக்கு நிதி ஒதுக்கீட்டில் ஓரவஞ்சனை, கீழடி நாகரிகத்தை அங்கீகரிக்க மறுக்கும் ஆணவத்தை நீடிக்கவிட மாட்டோம். தமிழுக்கும், தமிழகத்துக்கும் பா.ஜ.க. செய்துவரும் துரோகத்துக்கு பா.ஜ.க. பரிகாரம் தேட வேண்டும். இல்லையேல், அவர்களுக்கும், அவர்களது புதிய கூட்டாளிகளுக்கும் தமிழகம் மறக்க முடியாத பாடத்தை மீண்டும் கற்பிக்கும்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# த.வெ.க. ஆலோசகர் பிரசாந்த் கிஷோர் தற்காலிகமாக பதவியிலிருந்து விலகல்

தி.மு.க, அ.தி.மு.க, பா.ஜ.க. தேர்தல் வியூகங்களை வகுக்க குழு வைத்திருப்பதை போல, தமிழக வெற்றிக் கழகமும் வியூக வகுப்பாளர்களை வைத்துள்ளது. ஏற்கனவே, விஜய்க்கு ஜான் ஆரோக்கிய சாமி, ஆதவ் அர்ஜுனா உள்ளிட்டோர் பல்வேறு ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர்.

மேலும், பிரபல தேர்தல் வியூக வகுப்பாளர் பிரசாந்த் கிஷோரும் விஜய் கட்சிக்கு தேர்தல் உத்திகளை வகுக்கும் பணியில் ஈடுபட்டு வந்தார்.

கடந்த பெப்ரவரியில் நடந்த த.வெ.க. 2 ஆம் ஆண்டு தொடக்க விழாவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற பிரசாந்த் கிஷோர்,

"விஜய் ஒரு அரசியல் தலைவர் அல்ல. தமிழகத்தின் புதிய நம்பிக்கை. புதிய அரசியலை விரும்பும் கோடிக்கணக்கானோருக்கான இயக்கம் தவெக. மாற்றத்தை கொண்டு வரும் இலக்கை நிர்ணயிக்க நானும் சிறிதளவு உதவ இருக்கிறேன்." என்றார்.

அதன்படி, பிரசாந்த் கிஷோரின் சிம்ப்பிள் சென்ஸ் அனலட்டிக்ஸ் என்ற நிறுவனத்தின் பணியாளர்கள், தவெக உடன் இணைந்து 234 தொகுதிகளிலும் தேர்தல் உத்திகளை உருவாக்கும் பணியில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில், பிஹார் சட்டப்பேரவை தேர்தலில் பிரசாந்த் கிஷோரின் ஜன் சுராஜ் கட்சி போட்டியிடுவதால், அவர் தேர்தல் பணிகளில் மும்முரமாக செயல்பட்டு வருகிறார்.



இதனால், விஜய் கட்சிக்கு ஆலோசனை வழங்குவதில் இருந்து தற்காலிகமாக பிரசாந்த் கிஷோர் விலகியுள்ளார். பிஹார் தேர்தல் முடிவடைந்து, நவம்பர் மாதத்துக்கு பிறகே மீண்டும் த.வெ.க. ஆலோசகராக செயல்படுவது குறித்து முடிவெடுப்பேன் என பிரசாந்த் கிஷோர் தெரிவித்துள்ளார் என தகவல் வெளியாகி உள்ளது.



# 60 நாள் போர் நிறுத்தம் தொடர்பாக ஹமாஸ் - இஸ்ரேல் மறைமுக பேச்சு

காசாவில் முன்மொழியப்பட்ட 60 நாள் போர் நிறுத்தம் தொடர்பாக, ஹமாஸ் மற்றும் இஸ்ரேல் கட்டாரில் மறைமுக பேச்சுவார்த்தைகளில் ஈடுபட உள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ஹமாஸ் முன்மொழிந்த பல திருத்தங்களைநிராகரித்தபோதிலும், ஹமாஸுடன் மறைமுக பேச்சுவார்த்தையை நடத்த இஸ்ரேல் நேற்று கட்டாருக்கு குழுவொன்றை அனுப்பியுள்ளது.

இராஜதந்திர தடைகள் இருந்தபோதிலும், ஆயிரக்கணக்கான உயிர்களைக் கொன்ற மோதலைத் தணிக்க, கட்டார், எகிப்து மற்றும் அமெரிக்காவின் மத்தியஸ்தர்கள், தொடர்ந்து முயற்சித்து வருகின்றனர்.

இந்தநிலையில், மேற்படி பேச்சுவார்த்தைகளில் போர் நிறுத்தம் தொடர்பில் ஒரு திருப்புமுனை ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, கடந்த வெள்ளிக்கிழமை , 60 நாள் போர் நிறுத்தத்திற்கான முன்மொழிவுக்கு நேர்மறையான பதிலை அளித்ததாகவும், விவாதங்களுக்குத் தயாராக இருப்பதாகவும் ஹமாஸ் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இருப்பினும், நிரந்தர போர் நிறுத்தத்திற்கான பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தால் போர் மீண்டும் தொடங்காது என்ற உத்தரவாதம் உட்பட, திருத்தங்களை கோரியதாக பலஸ்தீனியர்கள் கூறுகின்றனர்.











# பாகிஸ்தானின் அடுக்குமாடி குடியிருப்பு இடிந்து வீழ்ந்ததில் 27 பேர் உயிரிழப்பு




பாகிஸ்தானின் கராச்சியிலுள்ள அடுக்குமாடி குடியிருப்புத் தொகுதியொன்று இடிந்து வீழ்ந்ததில், 27 பேர் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்களில் 15 பெண்களும், மூன்று சிறுவர்களும் அடங்குகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி குடியிருப்புத் தொகுதியில், 40 இற்கும் மேற்பட்டோர் வசித்து வந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையில், இடிபாடுகளுக்குள் சிக்குண்டவர்களைத் தேடும் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி அடுக்குமாடிக் குடியிருப்புத் தொகுதி, இடிந்து வீழ்ந்தமைக்கான காரணங்கள் இதுவரையில் வெளியாகவில்லை.

இருப்பினும், அந்த கட்டடம் 30 ஆண்டுகள் பழமையானது எனவும் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# டெக்ஸாஸ் வெள்ளத்தில் சிக்குண்டு 15 சிறுவர்கள் உட்பட 45 பேர் பலி









அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாநிலத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்குண்டு 15 சிறுவர்கள் உட்பட 43 பேர் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், காணாமல் போனவர்களைத் தேடும் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவரை சுமார் 850 இற்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டுள்ளனர் என மீட்பு படையினர் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவின், தென்- மத்திய டெக்சாஸ் மாகாணத்தின், மலைப் பகுதியில் அமைந்துள்ள கெர் கவுன்டியில் கடந்த வெள்ளிக்கிழமை பலத்த காற்றுடன் திடீரென பலத்த மழை பெய்தது.

இதனால் அங்குள்ள குவாடலூப் ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

குவாடலூ ஆற்றில் 45 நிமிடங்களில் 26 அடி அளவுக்கு நீர்மட்டம் உயர்ந்து, கரையிலிருந்த குடியிருப்புகள் வெள்ளத்தில் அள்ளுண்டு செல்லப்பட்டன என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

வெள்ளப்பெருக்கில் சிக்குண்டு பலர் உயிரிழந்ததுடன், பலர் காணாமலும் போயுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையில், உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் சாத்தியம் உள்ளதாகவும் மீட்புப் படையினர் அச்சம் வெளியிட்டுள்ளனர்.



# பழமையைப் பறைசாற்றும் வாலையம்மன் கோயிலின் மகா கும்பாபிஷேகம் இன்று பக்திபூர்வமாக நல்லூரில்

- தி.மயூரகிரிக்குருக்கள் -

யாழ்ப்பாணத்து நல்லூரிலிருந்து கோயில் வீதி வழி இராஜ வீதியை நோக்கிப் பயணிக்கும் போது (பூங்கனிச்சோலை அருகில்) இராமலிங்கம் வீதியில் "திருநெல்வேலி கிழக்கில்" புத்தாக்கம் பெற்ற பெரிய – அழகிய – கோயிலைப் பலரும் கண்டிருக்கலாம்.

கடந்த பதின்னான்கு ஆண்டுகளாக நடைபெற்ற இப்பெரிய கோயிற் திருப்பணிகள் நிறைவேறியுள்ள நிலையில் இன்று விஸ்வாவஸு ஆனி அனுஷத்தில் மஹா கும்பாபிஷேகம் நிகழ் இருக்கிறது.

வாலையம்மன் கோயில் என்று அழைக்கப்படும் இக்கோயில் முழுமையாகப் புத்தாக்கம் பெற்றாலும் ஒரு நூறாண்டேனும் பழைமை வாய்ந்தது. கோயில் வரலாறு மேலும் ஆய்வுக்குரியது.

சிலர் இந்தக் கோயில் நானூறு ஆண்டுகள் பழைமையானது என்றும் வைத்தியர் இராமலிங்கம் என்பவருக்கு சித்தர் ஒருவர் வழங்கிய ஸ்ரீசக்ர மேருவை அவரது அறிவுறுத்தலுக்கு அமைய மூலஸ்தானத்தில் ஸ்தாபித்து உருவாக்கப்பட்டது என்றும் சொல்கிறார்கள்.

இதனால் அக்குடும்பத்தின் குறை நீங்கி, அவர்களுக்கு அம்பாள் அருளால் வம்ச விருத்தி உண்டானது என்றும் சொல்கிறார்கள். இக்கோயில் இருக்கும் வீதி இராமலிங்கம் வீதி என்று அழைக்கப்படுவதும் இணைத்துச் சிந்திக்கத் தக்கது.

தவிரவும் இக்கோயிலை யாழ்ப்பாணத்தரசர் காலத்திற்குரியது என்று கருதுவோரும் உளர். எவ்வாறாயினும் இவை எல்லாம் இக்கோயில் பழைமையையே பறைசாற்றுகின்றன.

சடையம்மா முதலிய சித்தர்களால் வழிபடப்பட்டது என்ற நம்பிக்கைக்குரிய இக்கோயிலில் அம்பிகை வாலை ஆக (பருவமடையாத பெண் குழந்தை) வடிவில் வழிபடப்பட்டதால் வாலை அம்மன் கோயில் என்று அழைக்கப்படுகிறது.

தவிர, இக்கோயில் கருவறையில் விக்கிரகமில்லாமல் ஸ்ரீசக்ர மேரு வடிவம் மட்டுமே பிரதிஷ்டிக்கப்பட்டிருந்தது.

பாலஸ்தாபனமாகி பதின்னான்காவது வருடத்தில் பேராலயமாகிக் கும்பாபிஷேகம் நிகழும் போது மத்தியில் குறித்த பழைமையான ஸ்ரீசக்ர மேருவும் பாலா த்ரிபுர சுந்தரி விக்கிரகமும் பிரதிஷ்டையாக உள்ளன.

நான்கு வாசல்கள், பெரிய பிரகாரம், உயர்ந்த மதில்கள், அழகிய கோபுரம், நாற்புறமும் சதுர் வேத மூர்த்திகளுடன் கூடிய மணிக்கோபுரம், அழகிய புஷ்கரணி என்று மின்னுகிறது இக்கோயில்.

ஆரம்பத்தில் இக்கோயிலை வீரபாஹு தேவர் வம்சத்தினரான செங்குந்த முதலியார் மரபினர் சிறப்பாகப் பரிபாலித்தனர்.

தொடர்ச்சி▼





# பழமையைப் பறைசாற்றும் வாலையம்மன் கோயிலின் மகா கும்பாபிஷேகம் இன்று பக்திபூர்வமாக நல்லூரில்

தொடர்ச்சி▲

சில பல காரணங்களால் முப்பத்து ஐந்து ஆண்டுகள் மூடப்பட்டிருந்த இக்கோயிலை இந்து மரபுகளில் இறுக்கமான பற்றும் பக்தியும் மிக்க சுவாமி இராம தாஸ் நிலையத்தைச் சேர்ந்த அமரர் சீவரத் தினம் மற்றும் திருவாளர் பரமலிங்கம் ஆகி யோரிடம் 2003 ஆம் ஆண்டில் சாசனம் மூலம் இக்கோயிலை இவர்களே பரிபாலிக்கும் ஆற்றல் உள்ளவர்கள் எனக் கருதி அப்போது கோயிற் பரி பாலகராக இருந்த அமரர். திருவாளர் பிரபு அவர்கள் கையளித்தார் என்றும் அறிகிறோம்.

இதன் பின்னர் தான் கருணாலயம் முதலிய பல அறப்பணிகளை முன்னெடுக்கும் சுவாமி இராமதாஸ் நிலையத்தைச் சேர்ந்த இக்குடும்பத்தார் மற்றும் திருவாளர் முகுந்தன் ஆகியோரின் இணைவில் 2004இல் அமரர் தாணு. வாசுதேவக் குருக்கள் தலைமையில் கும்பாபிஷேகம் செய்தனர்.

பின்னர் 2011இல் பாலஸ்தாபனம் செய்து இப் பெரிய கலைக்களஞ்சியத்தை இப்போது உருவாக்கி உள்ளனர்.

கோயிற் திரு மதிலில் எங்கும் காண அரிதாக, ஸ்ரீ சக்ர தேவதைகளான திதிகளுக்குரிய திதி நித்யா தேவதைகளையும் திக் பாலகர்களையும் கூட நாம் பார்க்கிறோம்.

ஸ்ரீ வித்யா உபாசகரும் எம் அன்புக்குரிய வருமான சிவஸ்ரீ .சந்திர. சாந்தரூபக்குருக்கள் தலைமையில் இந்த ஆலய மஹா கும்பாபிஷே கம் நவகுண்ட பக்ஷமாக மேற்சொன்ன இன்றைய நாளில் நிகழ்கிறது.

நீண்ட காலத்திற்குப் பின் இந்த ஆலயம் கும்பா பிஷேகத்தோடு பொலிவு பெறுவது ஊருக்கே எழுச்சி தரும் என்பதில் மாற்றமில்லை. பாலா எம் மோடு இருந்து எம்மைப் பரிபாலிக்க வேண்டு வோம்.

**“வாலைக் குமரியாய் வனப்புறு கன்னியாய்**
**சேலை அணியும் சுமங்கலி சுவாசினியாய்**
**ஞாலத்தில் பல் வடிவம் கொண்டே அருளும்**
**சாலிவாடி புரத்தாளைச் சரணடைவோமே”**



# இன்றைய ராசி பலன்கள் -07.07.2025




இன்று நீங்கள் சுப காரியங்களில் பங்கு கொள்வீர்கள். புதிய நபர்கள் மற்றும் நண்பர்கள் ஏற்படுவார்கள். உங்கள் நண்பர்களின் பட்டியல் விரிவடையும்.

உங்கள் பணியில் நற்பெயர் எடுப்பீர்கள். சக பணியாளர்களும் ஆதரவாக இருப்பார்கள்.

உங்கள் துணையுடனான உறவில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். நல்லுறவை மேம்படுத்த உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச வேண்டும்.

இன்று பண வரவு அதிகரித்து காணப்படும். இன்றைய தினம் பங்கு வர்த்தகம் லாபம் தரும் மற்றும் சாதகமாக இருக்கும்.

மகிழ்ச்சியான மனநிலை உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும். உங்களை நீங்கள் உற்சாகமாக வைத்துக் கொள்ளுங்கள்.




உங்கள் கடின உழைப்பு மூலம் இன்று வெற்றி கிடைக்கும். உங்கள் சுய முன்னேற்றத்தின் மூலம் நீங்கள் கடினமாக உழைத்து வெற்றியை அடையலாம். இன்று நீங்கள் உங்கள் இலக்குகளை அமைத்துக் கொண்டு அதற்கு முயற்சி செய்வீர்கள்.

பணிநிமித்தமானபயணம்காணப்படும்.இதுஉங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் திருப்தியும் மகிழ்ச்சியும் ஏற்படும்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கும் சேமிப்பதற்கும் பணம் கிடைக்கும் அதிர்ஷ்டம் இன்று காணப்படுகின்றது.

இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்




உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்கள் அணுகுமுறையில் விட்டுகொடுத்து செல்லும் போக்குக் காணப்படும்.

உங்கள் மேலதிகாரிகள் மற்றும் சக பணியாளர்களுடன் ஒரு விருந்தில் கலந்து கொள்வீர்கள்.

இன்று உறவில் அன்பு நிறைந்து காணப்படும். அன்பான உணர்வுகளை வெளிப்படுத்துவதன் மூலம் இன்று உறவில் பிணைப்பு அதிகரிக்கும்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். பங்கு வர்த்தகம் மூலம் பணம் சம்பாதிக்கும் வாய்ப்பு உள்ளது.

இன்று நீங்கள் ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இந்த நாளில் மாபெரும் மாற்றங்கள் ஏற்படலாம். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்காது. அவர்களின் மூலம் சில இடையூறுகள் ஏறபடும்.

உங்கள் உறவில் அகந்தை மனப்பான்மை காணப்படும். இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நல்லது.

நிதிநிலை உங்கள் எதிர்பார்ப்பின் படி அமையாது. செலவுகள் அதிகமாக இருக்கும். சேமிப்பை பராமரிக்க இயலாது.

தோள்களில் வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது. முறையான உடற்பயிற்சி உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று வெற்றி பெறுவதற்கு விரைந்து முடிவெடுக்க வேண்டும். உங்கள் பணிகளை எளிதாக செய்து முடிப்பீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள்.

பணியில் உங்கள் முயற்சிக்கான நன்மதிப்பை பெறுவீர்கள்.முக்கியமான பணிகளை செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள். இது இருவருக்கும் திருப்தியை அளிக்கும்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக காணப்படுகின்றது. பணம் அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று சிறப்பான ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




நேர்மறை எண்ணங்களை வளர்த்துக் கொள்வது நல்லது. வெளியிடங்களுக்கு சென்று வருவதன் மூலம் அமைதி கிடைக்கும்.

பணியில் வெற்றி பெற மிகுந்த முயற்சி எடுக்க வேண்டும். உங்கள் பணிகளை திட்டமிட்டு முறைப்படி ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் சூடான விவாதங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க விஷயங்களை சகஜமாக எடுத்துக் கொள்வது நல்லது.

இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும். உங்கள் பணத்தை முறையாக செலவு செய்யும் நிலை காணப்படாது.

சரியான நேரத்தில் உணவு உட்கொள்ளுங்கள். அதிக நீரைப் பருகுங்கள். இது உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று தன்னம்பிக்கையுடன அமைதியான மன நிலையில் இருப்பீர்கள். உங்களின் முக்கியமான செயல்களை செய்து திருப்தி உணர்வை அடைவீர்கள்.

பணியிடத்தில் அனைத்தும் சிறப்பாக இருக்கும். உங்கள் பணிக்கு மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையே நல்ல பிணைப்பு காணப்படும்.இருவருக்கும் இடையேயான புரிந்துணர்வை மேம்படுத்திக் கொள்ளுங்கள்.

நிதிநிலை சிறப்பாக காணப்படும். உங்கள் சேமிப்பு உயரும்.

இன்று நீங்கள் ஆற்றலுடன் ஆரோக்கியமாக காணப்படுவீர்கள்.




எளிதான மற்றும் திட்டமிட்ட அணுகுமுறை மூலம் இன்று நீங்கள் வளர்ச்சி அடையலாம். உறுதி மற்றும் தைரியம் உங்களை உச்சத்துக்கு அழைத்துச் செல்லும்.

உங்கள் பணிகளை எளிதாக ஆற்றுவீர்கள். பணியிடத்தில் நன்மையும் பாராட்டும் கிடைக்கும்.

நல்ல புரிந்துணர்வை பராமரிக்க நட்பான அணுகுமுறை தேவை. இது இருவருக்கும் இடையேயான உறவின் பிணைப்பை வலுப்படுத்தும்.

இன்று பணவரவு அதிகமாக காணப்படும். உங்கள் சேமிப்பை கூட்ட இயலும்.

நீங்கள் இன்று முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். இன்றிய நாளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

# இன்றைய ராசி பலன்கள் -07.07.2025




ஆன்மீக ஈடுபாடு பலன் தரும். பிறருடன் பழகி அவர்களை நண்பர்களாக ஆக்கிக் கொள்ளலாம்.

நல்ல பலன்களைக் காண கடுமையாக உழைக்க வேண்டும். நீங்கள் சிறிது பணிகளை இன்று முடிப்பீர்கள். சில பணிகள் நிலுவையில் இருக்கும்.

உணர்ச்சிவசப்படுவதன் மூலம் துனையுடனான உறவில் புரிந்துணர்வு பாதிக்கப்படும். ஆரோக்கியமான உறவிற்கு இத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

இன்று அதிக செலவுகள் ஏற்படும். சில கடன்களை அடைக்க நேரும்.

உடல் உழைப்பு காரணமாக தோள்களில் வலி ஏற்படும். தியானம் மூலம் அமைதி பெறலாம்.




இன்று உற்சாகத்துடன் நீங்கள் செய்யும் எந்த ஒரு செயலும் உங்களுக்கு சாதகமாக அமையும். சில ஏமாற்றங்கள் காணப்படும். அவைகள் மூலம் தடை ஏற்பட அனுமதிக்காதீர்கள். உங்கள் செயல்களை தொடர்ந்து செய்யுங்கள்.

உங்கள பணியில் சில போராட்டங்கள் சந்திக்க நேரும். ஆனால் உங்கள் பணிகளை திட்டமிட்டு முறையாக ஆற்றுவதன் மூலம் வெற்றி கிடைக்கும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். இருவரும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும். நிதிநிலையை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று பலகீனமாகவும் சோர்வாகவும் இருப்பீர்கள். தியானம் மேற்கொள்வது நல்லது.




இன்று சில தடைகளை சந்திப்பீர்கள். என்றாலும் திட்டமிட்டு பணியாற்றினால் இந்த நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்ளலாம்.

அதிகரிக்கும் பணிகளை சமாளிக்க நேரும். இதனால் தேவையற்ற தவறுகள் ஏற்படும். பொறுமையுடன் பணிகளைக் கையாள்வது நல்லது.

உங்கள் துணையின் நடத்தை எரிச்சலை ஏற்படுத்தும். அமைதியாக இருந்து அறிவு பூர்வமாகப் பிரச்சினைகளைக் கையாள வேண்டும்.

இன்று நிதிநிலையில் கட்டுப்பாடு காணப்படும். தேவையற்ற செலவுகளை கண்காணியுங்கள்.

செரிமானம் சம்பத்தப்பட்ட பிரச்சினைகள் நேரலாம். வெளியிடங்களில் உணவு உண்பதை தவிர்த்தல் நலம்.




கூடுதல் பொறுப்புகள் காரணமாக பதட்டம் நிறைந்திருக்கும். பாதுகாப்பற்ற உணர்வு கானப்படும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்ப்பது நல்லது.

பணியிடத்தில் அமைதியான அணுகுமுறையை பராமரிக்க வேண்டும். இன்று பணிகள் அதிகமாக காணப்படும் என்பதால் பணிகளை சிறப்பாக திட்டமிட வேண்டும்.

உங்கள் உணர்வுகளை உங்களின் துணையிடம் வெளிப்படுத்துவது எளிதாக உணர்வீர்கள். எதிர்மறை எண்ணங்களைத் தவிர்த்தல் நல்லது.

இன்று நிதி வளர்ச்சி சுமாராக காணப்படும். செலவுகள் அதிகமாக இருக்கும்.

சளி அல்லது இருமல் பாதிப்புகள் காணப்படும்.நேர்மறை எண்ணத்தை பராமரிக்க முயலுங்கள்.



# நெல்லுக்கான உத்தரவாத விலையை அதிகரிக்குமாறு விவசாயிகள் கோரிக்கை

நெல்லுக்கான உத்தரவாத விலையை அதிகரிக்குமாறு, விவசாயிகள், அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதன்படி, உலர்த்தப்படாத நெல் ஒரு கிலோகிராமுக்கு 120 ரூபாவையும், உலர்த்தப்பட்ட ஒரு கிலோகிராம் நெல்லுக்கு 140 ரூபாவையும் உத்தரவாத விலையாக நிர்ணயிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தற்போது, ஒரு கிலோகிராம் நெல்லுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள 102 ரூபா விலையானது, பாரிய ஆலை உரிமையாளர்களுக்கே பயனளிப்பதாகவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.